**சார்பு நீதிமன்றம், திருவாரூர்**
முன்னிலை – **திரு. M.முருகன், M.L.,**
**சார்பு நீதிபதி, திருவாரூர்.**
2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09–ஆம் நாள், வியாழன் கிழமை
(திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீவிசுவாவசு வருடம், பங்குனித்திங்கள் 26–ஆம் நாள்)

**<u>அ.வ.எண்.84/2018</u>**
**(CNR.NO.TNTV03–000271–2018)**

ஸ்ரீ சக்தி ஏஜென்சிஸ் அதன்
உரிமையாளர் T.சரவணன் ... வாதி

// எதிராக //

ஸ்ரீ மாருதி ஏஜென்சிஸ் அதன்
உரிமையாளர் D.கைலாசம்,
பேரளம் ... பிரதிவாதி

இவ்வழக்கு இறுதியாக கடந்த 13.02.2026–ம் தேதி விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.கோபாலகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.R.அய்யப்பன் அவர்கள் ஆஜராகியும் இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், சாட்சிய, சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில், இன்றே இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**<u>தீ ர் ப் பு ரை</u>**

வாதிக்கு பிரதிவாதி தாவா தொகை ரூ.1,44,101/–ற்கு தாவா தாக்கலான தேதியிலிருந்து தொகை செல்லாகும் வரை 12% பின் வட்டியும் மற்றும் தாவா செலவுத்தொகையும் சேர்த்து வாதிக்கு செலுத்த பிரதிவாதிக்கு உத்தரவிட்டு தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வழங்க வேண்டி வாதியால் இத்தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **தாவா வழக்குரையின் சுருக்கம் :**

வாதி ஸ்ரீசக்தி ஏஜென்சி என்ற பெயரில் ஹார்லிக்ஸ் மற்றும் அது சம்பந்தமான பொருள்கள் வைத்து வியாபாரம் செய்து வருகிறார் என்றும், பிரதிவாதி ஸ்ரீமாருதி ஏஜென்சி என்ற பெயரில் கடந்த ஒரு வருடமாக வியாபாரம் செய்து வருகிறார் என்றும், இந்நிலையில் வாதியிடம் பிரதிவாதி வியாபாரம் செய்த வகையில் ரூ.1,36,177/-த்தை வாதிக்கு பிரதிவாதி திரும்ப செலுத்த வேண்டியிருந்தது என்றும், அதனை ஒப்புக்கொண்டு பிரதிவாதி 19.02.2017 தேதியிட்ட வரி பட்டியலில் (Tax invoice) கையொப்பம் செய்து பொருட்களை பெற்றுக்கொண்டுள்ளார் என்றும், ஆனால் பிரதிவாதி மேற்படி தொகையை திரும்ப கொடுக்காமல் பொய்யான சங்கதிகளை கண்டு வாதிக்கு 27.01.2018 தேதியிட்ட கடிதம் ஒன்றை அனுப்பினார் என்றும், அதற்கு பிரதிவாதி தனது வழக்கறிஞர் மூலம் 10.02.2018 அன்று ஒரு பதிலறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றும், பதிலறிவிப்பில் வாதியிடமிருந்து பிரதிவாதி பெற்ற சரக்குகளில் சேதமான சரக்குகளையும், விற்பனையாகாமல் இருந்து வரும் சரக்குகளையும் பட்டியலிட்டு பிரதிவாதி வாதிக்கு அனுப்ப வேண்டுமென தெரிவித்துள்ள போதிலும் பிரதிவாதி தரப்பில் சரக்குகளை வாதிக்கு திரும்ப அனுப்பவில்லை என்றும், வாதிக்கு பிரதிவாதி திரும்ப செலுத்த கடமைப்பட்டிருந்தும் தாவா தொகையை திரும்ப செலுத்தாததால் வேறு வழியின்றி வாதி அசல் வழக்கை தாவா தொகையையும், பின்வட்டியையும் பிரதிவாதியிடமிருந்து வசூல் செய்ய ஏதுவாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

3. **பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை மற்றும் எதிர்பாத்திய வழக்குரையின் சுருக்கம் :**

வாதியின் தாவா சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், வாதி திருவாரூரில் உள்ள சக்தி ஏஜென்சி என்ற பெயரில் தொழில் செய்து வருவதும் பிரதிவாதி பேரளம் கிராமத்தில் ஸ்ரீமாருதி ஏஜென்சி என்ற பெயரில் தொழில் செய்து வருவதும் உண்மை என்றும், அதே போல் பிரதிவாதி ஹார்லிக்ஸ் ஏஜென்சி எடுத்து பிரதிவாதி வியாபாரம் செய்து வந்தார் என்பது உண்மை

என்றும், ஆனால் பிராதில் சொல்லியுள்ளவாறு ரூ.1,36,177/– வாதிக்கு பிரதிவாதி திரும்ப செலுத்த கடமைப்பட்டவரல்ல என்றும், வாதி நிறுவனத்தில் இருந்து ஹார்லிக்ஸ் சரக்குகளை பிரதிவாதி கடனுக்கு பெற்றுக்கொண்டு பொருட்களை விற்பனை செய்த பின்னிட்டு தொகை கொடுப்பதும் விற்பனை ஆகாமல் காலாவதியான பொருட்களை வாதியிடம் திரும்ப ஒப்படைப்பதும் வழக்கமாக இருந்து வந்தது என்றும், அதே போல் வாதி நிறுவனத்தில் பிரதிவாதி வியாபாரம் செய்த வகையில் 19.12.2017 தேதியிட்ட பில்களில் பிரதிவாதி கையொப்பம் செய்து கொடுத்தது உண்மை என்றும், ஆனால் வாதி நிறுவனத்திடமிருந்து பிரதிவாதி பெற்ற சரக்குகளில் 12.08.2017 அன்று பயன்பாட்டு தேதி முடிந்த பொருள்களுக்கும் வாதி பிரதிவாதி ரூ.1,314/–யும் அதே போல் 02.12.2017–ல் பயன்பாட்டு தேதி முடிந்த பொருட்களுக்காக வாதி பிரதிவாதிக்கு ரூ.17,146/–யும் அதற்கு பிந்தைய காலத்தில் பயன்பாட்டு தேதி முடிந்த சரக்குகளுக்கு ரூ.4,484/–யும் பிரதிவாதிக்கு வாதி கொடுக்க கடமைப்பட்டுள்ளார் என்றும், அதே போல் பிரதிவாதி விற்பனை செய்ய முடியாமல் தேங்கிய மற்றும் காலாவதியான சரக்குகளுக்காக வாதி பிரதிவாதிக்கு ரூ.97,357/–யும் அதே போல் வாதியிடமிருந்து வர வேண்டிய (Tax Repayment) ரூ.62,100/–யும் ஆக கூடுதலாக பிரதிவாதிக்கு வாதி ரூ.1,97,400/–ஐ திரும்ப செலுத்த கடமைப்பட்டுள்ளார் என்றும், அந்த வகையில் வாதி தரப்பு வழக்கின்படி வாதிக்கு பிரதிவாதி கொடுக்க வேண்டிய ரூ.1,36,177/–த்தை கழித்து கொண்டாலும் வாதி பிரதிவாதிக்கு ரூ.61,223/–ஐ திரும்ப செலுத்த கடமைப்பட்டுள்ளார் என்றும், அதே போல் வாதிக்கு பிரதிவாதி 27.1.2018 அன்று அறிவிப்பு கொடுத்த பின்னிட்டும் விற்பனையாகாமல் தேங்கிய மற்றும் காலாவதியான சரக்குகளை பிரதிவாதி நடத்தி வரும் ஏஜென்சி கடையில் வைத்து பராமரிக்க இயலாத காரணத்தினாலும் மாதம் ஆயிரத்திற்கு வாடகைக்கு ஒரு அறை எடுத்து அந்த அறையில் பொருள்களை வைத்துள்ளார் என்றும், அந்த வகையில் பிரதிவாதிக்கு ரூ.15,000/–த்தை கொடுக்க கடமைப்பட்டுள்ளார் என்றும், வாதி பிரதிவாதிக்கு கொடுக்க வேண்டிய ரூ.61,223/–த்துக்கு வட்டியும் சேர்த்து கூடுதலாக வாதி

பிரதிவாதிக்கு ரூ.70,406.45 திரும்ப செலுத்த வேண்டுமென பிரதிவாதியால் இந்த எதிர்வழக்குரையுடன் எதிர்பாத்திய வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே வாதியின் தாவாவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்தும் இந்த பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்ப்பாத்திய வழக்குரையில் கண்ட தொகையையும், பின்வட்டியையும் வாதி பிரதிவாதிக்கு திரும்ப செலுத்த வேண்டுமென தீர்ப்பு வழங்க வேண்டுமென எதிர்பாத்திய வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4. <u>வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை அடிப்படையில் கீழ்கண்ட எழுவினாக்கள் தீர்வுக்காக வனையப்பட்டது :</u>**

1. வாதி தாவா தொகையை பெற உகந்தவரா ?
2. பிரதிவாதி தான் கோரும் எதிர்பாத்திய கோரிக்கை (Counter claim) படி தொகையை வாதியிடமிருந்து பெற தகுதி உடையவரா ?
3. வாதிக்கு கிடைக்கும் வேறு பரிகாரம் என்ன ?
4. பிரதிவாதிக்கு கிடைக்கும் வேறு பரிகாரம் என்ன ?

5. இத்தாவாவில் வாதி திரு.சரவணன் என்பவரை வா.சா.1–ஆகவும், திரு.பாலசரவணன் என்பவரை வா.சா.2 ஆகவும், திரு.ராஜபூபதி என்பவரை வா.சா.3 ஆகவும், முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் 4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் பிரதிவாதி திரு.கைலாசம் என்பவரை பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு சான்றாவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை. நீதிமன்ற சான்றாவணம் நீ.ம.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**6. <u>எழுவினா–1, 2 :</u>**

1. வாதி தாவா தொகையை பெற உகந்தவரா ?
2. பிரதிவாதி தான் கோரும் எதிர்பாத்திய கோரிக்கை (Counter claim) படி தொகையை வாதியிடமிருந்து பெற தகுதி உடையவரா ?

6.1. இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்டதன் அடிப்படையில் இந்நீதிமன்றம் வழக்கு கோப்பை பரிசீலனை செய்ததில் வாதி திருவாரூரில் ஸ்ரீசக்தி ஏஜென்சி என்ற பெயரில் ஹார்லிக்ஸ் போன்ற சரக்குகளை வியாபாரம் செய்து வருவதும், அதே போல் பிரதிவாதி பேரளத்தில் ஸ்ரீமாருதி ஏஜென்சி என்ற பெயரில் வாதி நிறுவனத்திடம் இருந்து பொருட்களை வாங்கி விற்பனை செய்து வந்திருப்பதும், அதே போல் தாவா தொகை வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட தொகைக்கு வாதியிடமிருந்து பிரதிவாதி பொருள்கள் வாங்கியுள்ளார் என்பதையும் இந்நீதிமன்றம் அறிய முடிகிறது. பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் வாதி நிறுவன சரக்குகளை பிரதிவாதி போன்ற ஏஜென்சிக்கு கொடுக்கும்போது அதற்கான பில்களில் பிரதிவாதி போன்ற ஏஜென்சிகளிடம் கையொப்பம் வாங்கி கொள்வது வழக்கமாக இருந்துள்ளது. 19.12.2017 தேதியிட்ட பில்களில் பிரதிவாதி கையெழுத்து போட்டிருப்பது உண்மை என்று தெரிவித்திருப்பதிலிருந்து வாதி தாக்கல் செய்துள்ள வழக்கை வாதி நிரூபித்துள்ளதாகவே இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

6.2. இவ்வழக்கில் பிரதிவாதி தரப்பில் வாதியிடமிருந்து வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டபடி பிரதிவாதி பிராதில் கண்ட தொகைக்கு வாதியிடமிருந்து சரக்கு வாங்கினார் என்பதையும், வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது என ஒப்புக்கொண்டுள்ள போதிலும் பிரதிவாதி வாதியிடமிருந்து வாங்கிய பொருட்களில் காலாவதியான பொருட்களுக்காக 12.08.2017 தேதி படி ரூ.1,314/–த்தையும், 02.12.2017 தேததியின் படி ரூ.17,146/–யும், அதற்கு பின்னிட்டு தேதிகளில் ரூ.4,484/–ம் வாதி பிரதிவாதிக்கு கொடுக்க கடமைப்பட்டுள்ளார் என தெரிவித்துள்ளார். அதனை நிரூபிக்கும் வகையில் பிரதிவாதி தரப்பில் ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என பரிசீலனை செய்ததில் பிரதிவாதி தரப்பில் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை. ஆனால் வாதி வா.சா.1 ஆக இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்த போது தனது குறுக்கு விசாரணையில் பிரதிவாதி கொடுத்த பொருள்களுக்கும் அவரிடம் இருந்து திரும்ப வரப்பெற்ற பொருட்களுக்கும் உண்டான ஆவணங்கள் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான் என ஒப்புக்கொண்டிருப்பதிலிருந்து மேற்கண்டவாறு 3 ஆவணங்கள் படி பிரதிவாதியிடமிருந்து வாதி திரும்ப பெற்றுக்கொண்ட சரக்குகளில் தொகை ரூ.22,944/- என்பதை இந்நீதிமன்றம் அறிய முடிகிறது. அந்த தொகை வாதி பிரதிவாதிக்கு திரும்ப செலுத்த கடமைப்பட்டுள்ள போதிலும் அந்த தொகையை கழித்துக் கொண்டு வாதி அசல் வழக்கை தாக்கல் செய்யாமல் 19.12.2017 தேதியில் பில்லில் கண்ட தொகை முழுவதுக்கும் அசல் வழக்கை தாக்கல் செய்திருப்பது ஏற்புடையதல்ல. எனவே வாதி தாக்கல் செய்துள்ள வழக்கில் கண்ட அசல் தொகையான ரூ.1,36,177/-த்தை பிரதிவாதி கொடுக்க வேண்டிய தொகை ரூ.22,944/-த்தை கழித்துக்கொண்டுதான் வாதிக்கு பிரதிவாதி தொகையை திரும்ப செலுத்த கடமைப்பட்டுள்ளார்.

6.3. இவ்வழக்கில் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்பார்த்திய வழக்குரையில் வியாபாரத்திற்காக பெற்ற சரக்குகளில் விற்பனை செய்ய முடியாமல் தேங்கிய மற்றும் பயன்பாட்டு தேதி முடிந்த பொருட்களுக்காக வாதி பிரதிவாதிக்கு ரூ.97,357/-த்தை திரும்ப செலுத்த கடமைப்பட்டுள்ளார் என்று தெரிவித்திருப்பதை அறிய முடிகிறது. பிரதிவாதி தரப்பில் விவாதத்தின் போது மேற்கண்ட தொகைகளுக்குண்டான பொருட்களை பிரதிவாதி வாதிக்கு வா.சா.ஆ.2 ஆவணத்தின் படி கடிதம் அனுப்பிய பின்னிட்டும் பொருள்களை எடுக்காததால் அதற்கு ஏற்பட்ட நஷ்டத்திற்கு வாதியே பொறுப்பாவார் என்றும், அவரின் பொருட்கள் இதுநாள் வரை பிரதிவாதி கடையில் உள்ளது என்பதை நிரூபிக்கும் விதமாக இந்நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய மனு செய்து ஆணையர் நியமனம் செய்யப்பட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், இந்நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் மேற்கண்ட தொகைக்குண்டான பொருட்கள் பிரதிவாதி கடையில் விற்பனை செய்யப்படாமல் பராமரிக்கப்பட்டு வருவதை நிரூபித்துள்ளதனால் ரூ.97,357/-த்தை வாதி பிரதிவாதிக்கு திரும்ப செலுத்த கடமைப்பட்டுள்ளார் என்று எடுத்துரைக்கப்பட்டது.

6.4. வாதி தரப்பில் ஆணையர் அறிக்கை படி ரூ.97,357/—த்திற்குண்டான பொருள்களை வாதி திரும்ப எடுக்காமல் இருப்பதாக பிரதிவாதி தரப்பில் ஆணையர் அறிக்கை மூலம் நிரூபித்து விட்ட போதிலும், வாதிக்கு பிரதிவாதி வா.சா.ஆ.2 ஆவணத்தின் படி அறிவிப்பு அனுப்பியதில் அதற்கு பதில் கொடுக்கும் விதமாக வா.சா.ஆ.3 ஆவணத்தின் படி வழக்கறிஞர் மூலம் வாதி பதிலறிவிப்பு அனுப்பினார் என்றும், அந்த பதிலறிவிப்பில்

" மேலும் தங்கள் வசம் விற்பனையாகாமல் இருந்து வந்த ஹார்லிக்ஸ் ஸ்டாக் மற்றும் சேதமான ஹார்லிக்ஸ் ஆகியவற்றை திரும்ப அனுப்பாமலும் இருந்து வருகின்றீர்கள் என்று தெரிய வருகின்றது. தங்கள் வசமுள்ள மேற்படி ஹார்லிக்ஸ் வகையறாக்களை திரும்ப அனுப்பினால்தான் அவர் ஹார்லிக்ஸ் நிறுவனத்திற்கு தகவல் தெரிவிக்க ஏதுவாக இருக்கும். அத்துடன் தாங்கள் செலுத்திய வரி வகையறாக்களுக்குள்ள கணக்கினையும் அனுப்பி வைத்தால்தான் அதன் மீது எங்கள் கட்சிக்காரர் நடவடிக்கை எடுத்து தாங்கள் செலுத்திய வரிக்குரிய சலுகைத்தொகையினை பெற்றுத்தர இயலும் என்பதை அறியவும் "

என மேற்கண்டவாறு தெளிவாக வாதி பொருள்களை திரும்ப ஒப்படைக்க தெரிவித்த போதிலும் பிரதிவாதி பொருட்களை ஒப்படைக்காததால் தற்போது பிரதிவாதி வசம் இருக்கும் போது சரக்குகளுக்காக ஏற்பட்ட நஷ்ட தொகை ரூ.97,357/—த்தை வாதி பிரதிவாதிக்கு கொடுக்க கடமைப்பட்டவரல்ல என எடுத்துரைக்கப்பட்டது. ஆனால் பிரதிவாதி தரப்பில் விவாதத்தின் போது வாதியிடம் பிரதிவாதி பெற்ற சரக்குகளில் விற்பனை ஆகாததையும், காலாவதி முடிந்த பொருட்களையும் வாதியே திரும்ப எடுத்துக் கொள்வது வழக்கம் என்றும், அவ்வாறு எடுத்துக்கொள்ளாததால் மேற்படி தொகை வாதியே திரும்ப செலுத்த வேண்டுமென எடுத்துரைக்கப்பட்டதன் அடிப்படையில் இந்நீதிமன்றம் வா.சா.ஆ.2, 3 ஆவணங்களை பரிசீலனை செய்ததில் வாதி மற்றும் பிரதிவாதிக்கிடையே ஏற்பட்ட மன வருத்தத்தின் காரணமாக வாதி பிரதிவாதிக்கு

ஹார்லிக்ஸ் வியாபாரம் செய்வதை வேறு நபருக்கு மாற்றியுள்ளார் என்பதை இந்நீதிமன்றம் அறிய முடிகிறது.

6.5. மேலும் வாதி மற்றும் பிரதிவாதிக்கிடையே பிரச்சனை ஏற்பட்டு வேறு ஒரு நபருக்கு ஏஜென்சியை வாதி மாற்றி கொடுத்திருப்பதையும் அறிய முடிகிறது. அந்த பிரச்சனை பற்றி தற்போது இவ்வழக்கில் ஆராய வேண்டிய அவசியம் எழவில்லை. பிரதிவாதி வசம் உள்ள பொருட்களை பட்டியலிட்டு ஒரு காலத்திற்குள் அனுப்பி வைக்க தெரிவித்துள்ள போதிலும் பிரதிவாதி தரப்பில் அனுப்புவதற்கான நடவடிக்கை ஏதும் எடுக்காமல் இருந்து விட்டு தற்போது வரை கடையில் வைத்திருப்பதால் அதற்குண்டான நஷ்டஈட்டு தொகையை வாதியே கொடுக்க வேண்டுமென சொல்வது ஏற்புடையதல்ல. ஏனென்றால் விற்பனை செய்யப்படாமல் காலாவதி ஆகி விட்ட சரக்குகளை வாதியிடம் பிரதிவாதி திரும்ப ஒரு வார காலத்திற்குள் ஒப்படைக்க தெரிவித்து விட்டு விற்பனையில் இருவருக்கும் பொதுவான நபர் மூலமாகவோ அல்லது காவல்துறை மூலமாகவோ அல்லது திருவாரூரில் இருந்து வரும் மாவட்ட சட்டப் பணிகள் ஆணை குழு மூலமாகவோ அல்லது அசல் வழக்கை தாக்கல் செய்தோ பிரதிவாதி வசம் உள்ள பொருட்களை வாதி வசம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அவ்வாறு எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து விட்டு பிரதிவாதி தற்போது மேற்படி சரக்குக்குண்டான தொகையான ரூ.97,357/-த்தை திரும்ப செலுத்த வேண்டுமென சொல்வது ஏற்புடையதல்ல. எனவே அந்த தொகையை வாதிக்கு பிரதிவாதி திரும்ப செலுத்த கடமைப்பட்டவரல்ல என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

6.6. பிரதிவாதி தரப்பில் விவாதத்தின் போது நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கையில் கண்ட சரக்குகளை பிரதிவாதியிடமிருந்து வாதி எடுத்துக்கொள்ளாததால் அந்த சரக்குகள் காலாவதியாகி விட்டதால் பிரதிவாதி நடத்தும் கடையில் வைத்து பராமரிக்க இயலாத நிலையில் ஏற்பட்டு அந்த பொருட்களை பராமரிக்க மாதம் ரூ.1,000/-த்திற்கு கடை ஒன்றை வாடகைக்கு எடுத்து அதன் மூலம் பராமரித்து வருகிறார் என்றும், அவ்வாறு ஏற்பட்ட

நஷ்டத்திற்கு பிரதிவாதி ரூ.15,000/- கொடுக்க வேண்டும் எனவும் எடுத்துரைக்கப்பட்டது. அதன் அடிப்படையில் நீதிமன்றம் பிரதிவாதி பி.சா.1 ஆக சாட்சியமளித்துள்ள நிலையில் பி.சா.1-ன் குறுக்கு விசாரணையை பரிசீலனை செய்ததில்

" நான் மேற்சொன்ன முகவரியில் தாவா பொருட்களை தவிர வேறு பொருட்களை வைத்துள்ளேன் என்றால் தனியாக தான் வைத்துள்ளேன். ஆணையர் சொத்தை பார்வையிடும்போது வாதியிடம் வாங்கிய பொருட்களை காட்ட ஆவணம் கொடுத்தேனா என்றால் இல்லை" என்றும் காலாவதியான மற்றும் சேதாரமான பொருட்களுக்கு ரூ.1,000/- வாடகை கொடுத்து வைத்துள்ளேன் என்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த பொருள்களை எந்த இடத்தில் வைத்துள்ளேன் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் "

என்று தெரிவித்திருப்பதிலிருந்து பிரதிவாதி நடத்தி வரும் கடையில்தான் ஆணையர் சென்று பார்வையிட்டிருப்பதை அறிய முடிகிறது. மேலும் ஆணையர் அறிக்கையில் கடந்த 28.04.2025 அன்று பிற்பகல் 03:30 மணிக்கு பேரளத்தில் உள்ள மனுதாரர்/பிரதிவாதி ஏஜென்சிக்கு உபயவாதிகள் உபயவாதிகளின் வழக்கறிஞர் முன்னிலையில் ஸ்தல ஆய்வு மேற்கொண்டேன் என தெரிவித்திருப்பதிலிருந்து பிரதிவாதி சொல்வது போல் ரூ.1,000/-த்துக்கு கடை வாடகைக்கு எடுத்து பொருட்களை பராமரித்து வருவதாக சொல்வது உண்மை அல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்து கடை வாடகைக்காக பிரதிவாதி ரூ.15,000/-த்தை வாதி கொடுக்க வேண்டும் என்ற பிரதிவாதி தரப்பு கூற்றும் நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

6.7. இவ்வழக்கில் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்பாத்திய வழக்குரையில் குறிப்பிட்டுள்ள வட்டி தொகை ரூ.9,183.45 வாதிக்கு பிரதிவாதி திரும்ப செலுத்த கடமைப்பட்டவரல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது. பிரதிவாதி தரப்பில் விவாதத்தின் போது வா.சா.2., 3 சாட்சிகள் வாதி தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளிக்கவில்லை என எடுத்துரைக்கப்பட்ட

நிலையில் வா.சா.2, 3 சாட்சிகளின் சாட்சியத்தையும், பிராது மற்றும் எதிர்வழக்குரையை பரிசீலனை செய்ததில் வாதி மற்றும் பிரதிவாதிக்கிடையே ஏற்பட்டுள்ள வியாபாரமானது ஆவணங்கள் மூலம் ஏற்பட்டுள்ள நிலையில் வாதி வழக்கு வாதி சாட்சியத்தின் மூலமும் பிரதிவாதி வழக்கை பிரதிவாதி சாட்சியங்களின் மூலமும் நிரூபிக்க வேண்டிய அவசியம் எழவில்லை. ஆவணங்கள் அடிப்படையில் மட்டுமே இந்நீதிமன்றம் முடிவு காண வேண்டிய அவசியம் எழுந்துள்ளதால் வா.சா.2., 3 சாட்சிகளின் சாட்சியத்தை எடுக்கவில்லை என எடுத்துரைக்கப்பட்ட கூற்று ஏற்கத்தக்கதாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

6.8. இவ்வழக்கில் வாதி தாவாவில் கோரும் பரிகாரத்தின் படி தொகையான ரூ.1,36,177/-ல் வாதி பிரதிவாதிக்கு கொடுக்க வேண்டிய ரூ.22,944/-த்தை கழித்து போக பாக்கியுள்ள ரூ.1,13,223/-த்தை வாதிக்கு பிரதிவாதி திரும்ப செலுத்த கடமைப்பட்டுள்ளார் என்று 1-வது எழுவினாவுக்கும் பிரதிவாதி எதிர்பாத்திய வழக்குரையில் கோரியுள்ளவாறு வாதி பிரதிவாதிக்கு தொகை ஏதும் கொடுக்க கடமைப்பட்டவரல்ல என்று 2-வது எழுவினாவிற்க்கும் இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

7. <u>எழுவினா-3, 4 :</u>

3. வாதிக்கு கிடைக்கும் வேறு பரிகாரம் என்ன ?

4. பிரதிவாதிக்கு கிடைக்கும் வேறு பரிகாரம் என்ன ?

7.1. இவ்வழக்கில் வாதிக்கு தாவா அசல் தொகை ரூ.1,36,717/-த்தில் ரூ.22,944/- போக பாக்கித்தொகை மட்டுமே கிடைக்கக்கூடியது என முடிவு கண்டுள்ள நிலையில் வாதி ரூ.1,36,177/-த்தை 19.12.2017 முதல் 13.06.2018 வரை கோரியுள்ள வட்டி தொகை ரூ.7,924/-ல் ரூ.9,24/-ஐ கழித்துக்கொண்டு ரூ.7,000/-த்தை மட்டுமே வட்டியாக வாதி பிரதிவாதியிடம் இருந்து பெற தகுதி உடையவர் என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது. எனவே தாவா தொகையில் வாதிக்கு பிரதிவாதி ரூ.1,20,233/-த்தை மட்டுமே திரும்ப செலுத்த கடமைப்பட்டுள்ளார் என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

7.2. இவ்வழக்கில் வாதிக்கு தாவா தொகை கிடைக்கத்தக்கது என 1–வது எழுவினாவிலும் பிரதிவாதிக்கு எதிர்பாத்திய வழக்குரையில் கோரும் தொகை பிரதிவாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என 2–வது எழுவினாவிலும் இந்நீதிமன்றம் முடிவு கண்டுவிட்ட நிலையில் வாதி மற்றும் பிரதிவாதிக்கு இவ்வழக்கில் கிடைக்கத்தக்க வேறு பரிகாரம் ஏதும் இல்லை என எழுவினா–3, 4 இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**தீர்ப்பு பகரப்பட்டது. இறுதியாக, வாதிக்கு பிரதிவாதி தாவா தொகையில் ரூ.1,20,233/–யும் தாவா அசல் தொகை ரூ.1,13,233/–க்கு தாவா தாக்கல் செய்த தேதி முதல் தீர்ப்பு தேதி வரை 9% வட்டியும், தீர்ப்பு தேதியில் இருந்து வசூலாகும் தேதி வரை 6% வட்டியும் மற்றும் தாவா செலவுத்தொகையும் சேர்த்து பிரதிவாதி திரும்ப செலுத்த வேண்டும் என்றும் வாதியின் வழக்கை செலவுத்தொகையுடன் அனுமதித்தும். பிரதிவாதியின் எதிர்பாத்திய வழக்குரையில் கோரும் பரிகாரம் பிரதிவாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என முடிவு செய்தும் பிரதிவாதியின் எதிர்பாத்திய வழக்குரையை தள்ளுபடி செய்தும் இந்நீதிமன்றம் தீர்ப்பு வழங்குகிறது.**

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் சுருக்கெழுத்தில் எடுத்து விரிவாக்கம் செய்து கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, **2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09–ஆம்** நாள் இந்நீதிமன்றத்தில் உத்தரவு அவையறிய பகரப்பட்டது.

MURUGAN M Digitally signed by MURUGAN M Date: 2026.04.09 17:51:08 +0530

சார்பு நீதிபதி,
திருவாரூர்.

<u>**வாதி தரப்பு சாட்சிகள்:**</u>

வா.சா.1 – திரு. சரவணன் (வாதி)
வா.சா.2 – திரு. பாலசரவணன்
வா.சா.3 – திரு. ராஜபூபதி

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 19.12.2017 | பிரதிவாதி வாதிக்கு அனுப்பிய வரிப்பட்டியல் – நகல் |
| வா.சா.ஆ.2 | 27.01.2018 | பிரதிவாதி வாதிக்கு எழுதிய கடிதம் – அசலுடன் சரிபார்க்கப்பட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | 10.02.2018 | வாதியின் வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு – அலுவலக நகல் |
| வா.சா.ஆ.4 | -- | மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை – அசல் |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சி :</u>**

பி.வா.சா.1 – திரு. கைலாசம் (பிரதிவாதி)

**<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் :</u>** இல்லை.

**<u>நீதிமன்ற சான்றாவணங்கள் :</u>**

| | | |
|---|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | 26.04.2025 | வழக்கறிஞர் ஆணையரால் தாக்கல் செய்யப்பட்ட ஆணையர் அறிக்கை – நகல் |

MURUGAN M
Digitally signed by MURUGAN M
Date: 2026.04.09 17:51:14 +0530

சார்பு நீதிபதி,
திருவாரூர்.